## சுருக்கம்

கலையும் பண்பாடும் – சென்னை ஆசிய கல்வி நிறுவனம் மற்றும் மொரிஷியஸ் சர்வதேச திருக்குறள் நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து புதுதில்லி, யுனெஸ்கோ அரங்கத்தில் 23.09.2019 மற்றும் 24.09.2019 ஆகிய நாட்கள் மூன்றாவது திருக்குறள் சர்வதேச மாநாடு நடத்துதல் – சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் – ரூ.3.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண் 2) துறை

அரசாணை (ப) எண். 116

நாள்: 20–09–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், புரட்டாசி 3

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 92, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 31.03.2017
2. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடித ந.க. எண்.4435/இ1/2019, நாள்:20.08.2019

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னையில் உள்ள ஆசியவியல் நிறுவனம் மற்றும் மொரிஷியஸ் நாட்டில் இயங்கும் புலம்பெயர்ந்த தமிழர்களின் பன்னாட்டு சங்கம் ஆகிய இரண்டு அமைப்புகளும் இணைந்து கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரியில் 17.05.2017 முதல் 19.05.2017 வரை நடத்தப்பட்ட ‘அனைத்துலக திருக்குறள் மாநாட்டில்’ கலை பண்பாட்டுத் துறை சார்பாக திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்காக ரூ.1,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது.

2. சென்னை ஆசிய கல்வி நிறுவனம் மற்றும் மொரிஷியஸ் சர்வதேச திருக்குறள் நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து புதுதில்லி, யுனெஸ்கோ அரங்கில் 23.09.2019 மற்றும் 24.09.2019 ஆகிய இரண்டு நாட்கள் நடத்தப்படவுள்ள சர்வதேச தமிழறிஞர்கள் கலந்து கொள்ளும் மூன்றாவது திருக்குறள் சர்வதேச மாநாட்டில் உலகப் பொதுமறையாம் திருக்குறளின் பெருமையினை கலைகள் வாயிலாக எடுத்துரைக்கும் வகையில், கலை பண்பாட்டுத் துறையின் சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் மூலம் “நாதஸ்வர இசையில் திருக்குறள்” என்ற வகையில் காஞ்சிபுரம்

திரு.ஜி.ரமேஷ் குழுவினரின் மங்கல இசை நிகழ்ச்சி மற்றும் “திருக்குறளும் அன்புடைமையும்” எனும் தலைப்பில் கோயம்புத்தூர் சங்கரம் நாட்டியப் பள்ளியின் வாயிலாக நாட்டிய நாடகம் ஆகியவற்றை சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் நடத்திட ஏற்படும் உத்தேச செலவினங்களுக்காக **2019–2020**ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் இருந்து ரூ.4.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, சென்னை, ஆசிய கல்வி நிறுவனம் மற்றும் மொரிஷியஸ் சர்வதேச திருக்குறள் நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து புதுதில்லி, யுனெஸ்கோ அரங்கில் **23.09.2019** மற்றும் **24.09.2019** ஆகிய இரண்டு நாட்கள் நடத்தப்படவுள்ள மூன்றாவது திருக்குறள் சர்வதேச மாநாட்டில் கலை பண்பாட்டுத் துறை சார்பாக சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் திருக்குறளை மையமாகக் கொண்டு மங்கல இசை மற்றும் தமிழக நாட்டிய நாடகக் கலை நிகழ்ச்சிகளை நடத்திட ஏற்படும் கீழ்க்கண்ட உத்தேச செலவினங்களுக்காக ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

| **வ. எண்** | **விவரம்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1. | நாட்டிய நாடகம் நடத்தும் கலைக்குழுவினருக்கான மதிப்பூதியம் மற்றும் ஒத்திகை செலவினங்கள் | **1,50,000/–** |
| 2. | நாட்டிய நாடகக் குழுவினரின் போக்குவரத்து செலவினம் (20 நபர்கள் X ரூ.2,500/–) | **50,000/–** |
| 4. | பயணத்தின் போது ஏற்படும் உணவுச் செலவினங்கள் மற்றும் பயணப்படிகள் (ரூ.400 X 4 நாட்கள் X 20 நபர்கள்) | **32,000/–** |
| 5. | மங்கல இசைக் குழுவினர் மதிப்பூதியம் | **40,000/–** |
| 6. | மங்கல இசைக் குழுவினர் போக்குவரத்துச் செலவினம், உணவுச் செலவினம் மற்றும் பயணப்படிகள் (ரூ.11,000/– + ரூ.17,000/–) | **28,000/–** |
| | **மொத்தம்** | **3,00,000/–** |

.

**4.** மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

“2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை” (பழைய த.தொ.கு. 2205 00 102 JA 0933)
(த.தொ.கு.2205 00 102 JA 30903)

**5.** மேலே பத்தி **3–**ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க கலை பண்பாட்டுத் துறை ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

**6.** மேற்காணும் கலை நிகழ்ச்சிகள் நடத்தி முடித்த பின்னர், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது தொடர்பான விரிவான அறிக்கை, புகைப்படம், பத்திரிகை செய்தி மற்றும் விரிவான செலவினங்களை உள்ளடக்கிய பயனீட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை அரசுக்கு தவறாது அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். **44822**/நிதி(கல்வி–II)/**2019**, நாள்: **17.09.2019–**ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர் , கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும்சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்.

**<u>நகல்:-</u>**

நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

20/09/19

**பிரிவு அலுவலர்**